DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure).

**IN THE COURT OF** ***Special Court for trial of cases under the Prevention of Corruption Act, Salem.***

Calendar

Miscellaneous

Preliminary register

Sessions Special CC.1/2017

Deposition of witness for : P.W.9

Name : டாக்டர் சி.ரவிச்சந்திரன்

Father's Name : சின்னத்தம்பி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 by Tmt. KALPANA, Assistant of this court on the day of 30.07.2019.

<u>முதல் விசாரணை</u>

நான் ஏற்கனவே இந்தியன் வங்கி சுயவேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனத்தில் Senior Manager / director ஆக பணிபுரிந்து 28.02.2019 ம் தேதி பணி ஓய்வு பெற்றேன். கடந்த 27.06.2012 ம் தேதி முதல் 2 வருடம் இந்தியன் வங்கி 4 ரோடு கிளையில் முது நிலை மேலாளராக பணிபுரிந்து வந்தேன். மேற்படி சேலம் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் கடித எண்.Rc 256/2012/HD/SL Dt/11.02.2013 என்ற கடிதத்தில் எங்கள் வங்கியில் திரு.பி பன்னீர்செல்வம் மற்றும் அவரது மனைவி விஜயா

ஆகியோர்களின் பெயரில் கூட்டாக உள்ள சேமிப்பு கணக்கு எண்.107033 ல் 01.01.2001 முதல் 27.12.2012 வரை உள்ள காலத்திற்கும் Statement of Accounts மேலும் அவர்கள் பெயரில் இருக்கும் இதர கணக்குகளோ அல்லது இட்டு வைப்புகளோ (Fixed Deposit) மற்றும் அவர்களது பெயரில் உள்ள பாதுகாப்பு பெட்டக எண்.G2-54 செலுத்தப்பட்ட வாடகை மற்றும் டெபாசிட் ஆகிய விவரங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டிருந்தார். மேற்படி கணக்கு எண்.107033 னாது 16.07.1999 ல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான விவரங்கள் 31.03.2003 முதல் 08.05.2013 வரை உண்டான காலத்திற்கு உண்டான பரிவர்த்தனை விவரங்கள் மட்டுமே கிடைக்கப்பெற்றது. 31.03.2003 ம் ஆண்டிற்கு முன்னிட்ட கணக்கு விவரங்கள் கிடைக்கப்பெறவில்லை. மேற்படி சேமிப்பு கணக்கில் 31.01.2004 ம் தேதி அன்று கையிருப்பாக ரூ.8019/- உள்ளது. அதற்கு வட்டியாக ரூ.1703/- வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பன்னீர்செல்வம் மற்றும் விஜயாக ஆகியோர் பெயரில் கூட்டாக உள்ள பாதுகாப்பு பெட்டகம் எண்.G2-54, 31.03.2003 முதல் 31.03.2004 வரை வாடகையாக ரூ.400/-ம், 07.12.2003 ம் தேதி அன்று மேற்படி பாதுகாப்பு பெட்டகம் எண்.G2-54, Caution Deposit ஆக ரூ.10000/- செலுத்தப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக 22.03.2013 ம் தேதி நான் மேற்படி விவரங்கள் குறித்து என்னுடைய வங்கியின் மூலம் பதில் கடிதம் அனுப்பியுள்ளேன். மேற்படி கடிதத்துடன் வங்கிக் கணக்கு பழைய எண்.107033 (அதன் புதிய எண்.407916410) தொடங்கப்பட்ட நாள் 16.07.1999 ஆகும். மேற்படி கணக்குதாரரின் விலாசம் திரு.பன்னீர்செல்வம் மற்றும் விஜயா, கதவு எண்.41E, எல்லப்ப நகர், திருவாக்கவுண்டனூர் அஞ்சல், சேலம்-5 ஆகும். மேற்படி திரு.பன்னீர்செல்வம் மற்றும் விஜயா, ஆகியோர்களது பெயரில் கூட்டாக உள்ள பாதுகாப்பு பெட்டகம் எண்.G2-54 ஆகும். மேற்படி பாதுகாப்பு பெட்டகத்திற்கும் மேற்படி கதவு எண்.41E, எல்லப்ப நகர், திருவாக்கவுண்டனூர் அஞ்சல், சேலம்-5 என்ற விலாசமே கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி பாதுகாப்பு பெட்டகத்திற்கு வழங்கப்பட்டுள்ள வாடகை தொகையின் விவரங்கள் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பாதுகாப்பு பெட்டகம் G2-54 செலுத்தப்பட்ட Caution Deposit ற்கான ரசீது எண் 407930354 ஆகும். மேற்படி விஜயா என்பவர் பெயரில் தனியாக ஒரு சேமிப்பு கணக்கு எங்கள் வங்கியில் இருந்தது. அதன் எண்.6089917678 ஆகும். மேற்படி விவரங்கள் அடங்கிய கோப்பை நான் கையெழுத்து போட்டு அனுப்பியுள்ளேன். என்னிடம் காட்டப்படும்

கோப்பில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கோப்பு அ.சா.ஆ.28 ஆகும் (26 பக்கங்கள் அடங்கியது). மேலும் 28.12.2012 ம் தேதி சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் மேற்படி பாதுகாப்பு பெட்டகத்தை சோதனையிட வந்துள்ளதாக எனக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார். நான் அலுவல் வேலையாக வெளியூர் சென்றிருந்ததால் எனது உதவி மேலாளர் திரு.சந்திரசேகரன் அவர்களை விஜிலன்ஸ் போலீசாருக்கு ஒத்துழைப்பு தருமாறு நான் அறிவுறுத்தியிருந்தேன். மேற்படி பெட்டகத்தை திரு.பன்னீர்செல்வம் மற்றும் உதவி மேலாளர் சந்திரசேகரன் ஆகியோர்கள் முன்னிலையில் சோதனையிட்டு அதிலிருந்து 25 பவுன் தங்க நகைகள் எங்கள் வங்கியின் நகை மதீப்பீட்டாளார் திரு.ஆர்.அசோக்தாஸ் என்பவர் மூலம் மதிப்பீடு செய்து குறித்துக் கொண்டு போனதாக கேள்விப்பட்டேன். இது சம்மந்தமாக என்னை சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் 03.05.2013 ம் தேதி விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

மேற்படி பாதுகாப்பு பெட்டகத்தை யார் யார் ஆய்வு செய்து என்ன பொருட்களை பார்த்தார்கள் என்ற விவரங்களை திரு.சந்திரசேகரன் சொல்லித்தார் தெரியும் என்றாலும் அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்பது சரிதான்.

Sd/-டாக்டர் சி.ரவிச்சந்திரன்

/True copy/

Sd/-Tmt.V.P.Sugandhi,
Special Judge,
Special court for trial of cases under the
Prevention of Corruption Act, Salem.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure).

**IN THE COURT OF** ***Special Court for trial of cases under the Prevention of Corruption Act, Salem.***

Calendar

Miscellaneous

Preliminary register

Sessions Special CC.1/2017

Deposition of witness for : P.W.8

Name : தாமரைநங்கை

Husband's Name : ராதாகிருஷ்ணன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 by Tmt. KALPANA, Assistant of this court on the day of 30.07.2019.

**முதல் விசாரணை**

நான் சேலம் சுப்ரமணிய நகரில் குடியிருந்து வருகிறேன். நான் 06.03.2019 ம் தேதி முதல் இளநிலை பொறியாளராக சூரமங்கலம் பிரிவில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் 21.02.2011 ம் தேதி முதல் 05.02.2016 ம் தேதி வரை திருவாக்கவுண்டனூர் பிரிவில் இளநிலை பொறியாளராக பணியாற்றி வந்தேன். சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் கடிதம் RC 256/HD/SL நாள் 11.02.2013 ம் தேதியில் மின் இணைப்பு சம்மந்தமாக

கீழ்கண்ட மின் இணைப்புகளுக்கான 465-003-1819, 465-003-1898, 465-003-1899, 465-003-1900, 465-003-1901 மின் இணைப்பு வழங்கப்பட்ட தேதி மற்றும் டெபாசிட் செலுத்தப்பட்ட தேதி ஆகிவற்றின் விவரம் அளிக்குமாறு கோரப்பட்டிருந்தது. அதற்கு கடித எண் Lr/No.JE/O&M/ T.G.Noor/Slm/ Rs/F/Billing/D.No.297/2013 Dt:04.03.2013 என்ற கடிதத்தில் மின் இணைப்பு எண்.465-003-1819 மின் இணைப்பு வழங்கப்பட்ட தேதி 01.02.2003 வைப்புத் தொகை ரூ.2500.0 மற்றும் மேற்குறிப்பிட்ட 4 மின் இணைப்புகளுக்கும் டெபாசிட் தொகை தலா ரூ.5000/- ஆகும். மேற்படி 4 மின் இணைப்புகளுக்கும் 12.09.2003 ம் தேதி மின் இணைப்பு வழங்கப்பட்டதாக அலுவலக பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது.மேற்படி 5 மின் இணைப்புகள் சம்மந்தமாக நான் அனுப்பிய கடிதங்கள் அடங்கிய கோப்பு அ.சா.ஆ.27 (14 பக்கங்கள்) ஆகும். அ.சா.ஆ.27 கோப்பில் உள்ள அனைத்து கையெழுத்துகளும் என்னுடையதாகும். இது சம்மந்தமாக சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் என்னை 12.03.2013 ம் தேதி விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

புதிய வீட்டிற்கு மின் இணைப்பு பெற கட்டிடம் கட்டி சிமெண்ட் பூச்சு வேலை முடிந்து ஒயரிங் வேலை முடித்திருந்தால் புதிய மிண் இணைப்பு வழங்கலாம் என்றால் அது சரி. என்னிடம் காட்டப்படும் 2ம் எதிரி பெயருக்கு வழங்கப்பட்டுள்ள மின் இணைப்பு எண்.465-003-3166 எங்கள் திருவாக்கவுண்டனூர் மின் வாரிய அலுவலகத்தால் வழங்கப்பட்டுள்ளது என்றால் அது சரிதான். **அது எ.த.சா.1** ஆகும்.

**மறு விசாரணை**

எ.த.சா.1 ஐ பார்த்து அதிலுள்ள மின் இணைப்பு எண்.465-003-3166 எந்த தேதியில் வழங்கப்பட்டுள்ளது என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது அலுவலகத்தில் உள்ள கோப்புகளை பார்த்துதான் சொல்ல முடியும். அ.சா.ஆ.27 ல் உள்ள 2வது எதிரியின் வீட்டிற்குதான் மேற்படி மின் இணைப்பு எண்.465-003-3166 வழங்கப்பட்டுள்ளதா என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் அந்த விவரங்களை அ.சா.ஆ.27 மற்றும் எ.த.சா.1 ஐ பார்த்து என்னால் சொல்ல முடியாது.

**மறு குறுக்கு விசாரணை**

எ.த.சா.1 ல் உள்ள விவரங்களை போர்மென் எழுதியுள்ளார் என்றால்

சரிதான். அதன்படி எ.த.சா.1 ல் 09.09.2014 ம் தேதி எழுதப்பட்டுள்ள குறிப்புக்கு என்ன விவரம் என்றால் புதிய மீட்டர் கொடுக்கப்பட்டிருக்கலாம். அல்லது மீட்டர் மாற்றி வைத்திருக்கலாம்.

Sd/-தாமரைநங்கை

/True copy/

Sd/-Tmt.V.P.Sugandhi,
Special Judge,
Special court for trial of cases under the Prevention of Corruption Act, Salem.